# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 1998 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, இலங்கை நாணய வியல் கற்கைகள் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(1998, யூன் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1998, யூன் மாதம் 26 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 7.75 தபாற் செலவு : ரூபா 4.60

# 1998 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, இலங்கை நாணய வியல் கற்கைகள் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.— ஓ. 48/ 95

## இலங்கை நாணயவியல் கற்கைகள் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"இலங்கை நாணயவியல் கற்கைகள் சங்கம்" என அழைக்கப் படுவதும் அறியப்படுவதுமான ஒரு சங்கம் அதன் உறுப்பினர் களால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட சங்கம் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள் களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கங்களுக்கென தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்:

சொல்லப்பட்ட சங்கமானது எக்குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்குமாக உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக் கோள்களையும் கருமங்களையும் அது இதுவரை வெற்றிகர மாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாத லாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாத லாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப்பெயர்.

1. இச்சட்டம், 1998 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, இலங்கை நாணயவியல் கற்கைகள் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

இலங்கை நாணய வியல் கற்கைகள் சங்கத்தைக் கூட்டிணைத்தல்.

2. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும், அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை நாணயவியல் கற்கைகள் சங்கத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்க ளாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்த கையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை நாணயவியல் கற்கைகள் சங்கம் என்னும் பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டி ணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக் கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்ட தாதலும் வேண்டும்.

2 — டீ — 042385 — 1,100 (96/11)

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக் கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக்குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) நாணயவியல் அறிவையும் அதுபற்றிய பொது விழிப்பையும் உருவாக்குவதன் மூலமும், கருத்துக் களைப் பரிமாறிக் கொள்வதற்கமையச் சேகரிப் பாளர்களை ஊக்குவிப்பதன் மூலமும் நாணயவியல் அறிவியலை மேம்படுத்தல் ;

(ஆ) பலவகையான நாணயங்களையும், அரிய நாணயங் களையும் வரலாற்றுப் பெறுமதிவாய்ந்த நாணயத் தாள்களையும் பேணிப் பாதுகாப்பதற்கான திட்டத்தைத் தயாரித்தலும், நாணய சேகரிப்பாளர்களின் பயன்பாட் டுக்கென ஆய்வுகூடமொன்றை நிறுவுதலும் ;

(இ) இலங்கையிலும் பிற நாடுகளிலும் பயன்படுத்தப்படும் நாணயங்கள், அரிய நாணயங்கள், நாணயத்தாள்கள் என்பனமீது கணனிப்படுத்தப்பட்ட தரவு அடித்தள மொன்றை ஆக்குதல் ;

(ஈ) நாணயவியல் மீதிலான அறிவை மேம்படுத்தும் கருத்துடன் நாணயவியல் அரும்பொருளகமொன்றை யும் நூல் நிலையமொன்றையும் தாபித்துப் பேணுதல் ;

(உ) நாணயவியல் மீதிலான தகவலைப் பரப்புவதற்காக, சஞ்சிகைகள், தனிவரைபுகள், நூல்கள் அத்துடன் பருவ வெளியீடுகள் என்பனவற்றை வெளியிடுதல் ;

(ஊ) நாணயவியல் மீது மாநாடுகள், கருத்தரங்குகள், பொருட்காட்சிகள் என்பனவற்றை நடாத்துதல் ; அத் துடன்

(எ) மேலே சொல்லப்பட்ட குறிக்கோள்களை மேம்படுத்து வதற்காக அவசியமானதும், விரும்பத்தக்கனவுமான வேறு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4.** எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கூட்டுத்தாபனமானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அவை கூட்டுத்தாபனத்தின் முகாமைக் குழுவினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும் :—

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக. அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், விற்றல் அல்லது பரிமாற்றம் செய்தல் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடிவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் ஒன்றில் நேரடியாகவோ அல்லது கூட்டுத்தாபனத்தினால் அதன் சார்பில் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டவரான எவரேனும் அலுவலர் அல்லது முகவர் மூலமோ செய்தல் அல்லது புரிதல் ;

(இ) இலங்கையில் அல்லது வெளிநாட்டில் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட வேறு ஆட்களுடன், முகவர் நிலையங்களுடன், ஒழுங்கமைப்புகளுடன் ஒத்திசைந்து உதவிசெய்து அவற்றிலிருந்து உதவிகளைப் பெற்று அவர்களுடனான தொடர்பை அபிவிருத்தி செய்தல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் கிளைகளை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தாபித்தல் ;

(உ) நாணயவியல்மீது மாநாடுகள், பயிற்சித் திட்டங்கள், கருத்தரங்குகள், வேலைக்களங்கள், கூட்டக்கற்கைகள் அத்துடன் பகிரங்கச சொற்பொழிவுகள் என்பவற்றிற்கு ஆதரவளித்து நடாத்துதல் ;

(ஊ) இலங்கையில் உள்ள அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள மூலவளங்களிலிருந்து பணமாகவோ அல்லது வேறுவகையாகவோ கொடைகளை, மானியக்கொடைகளை, நன்கொடைகளை, உதவிப் பணங்களைப் பெற்றுக்கொள்ளல் ;

(எ) வங்கிக் கணக்குகளைத் திறத்தல், நடைமுறைப் படுத்துதல் அத்துடன் காசோலைகள், ஆணைப் பத்திரங்கள், வாக்குறுதிப்பத்திரங்கள், நாணய மாற்றுண்டியல்கள் அத்துடன் கைமாற்றத்தகு சாதனங் கள் என்பவற்றை வரைதல், செய்தல், ஏற்றுக்கொள் ளல், புறக்குறிப்பிடுதல், கைமாற்றுதல் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்று வதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும், ஊழியர்களையும், கூட்டுத்தாப னத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகள், நிபந்தனைகள் என்பன மீதும், அத்தகைய ஊதியத்திலும் நியமித்தல், தொழிலில் ஈடுபடுத்துதல், அத்துடன் பதவிவிலக்குதல் ;

(ஐ) நாணயவியல் ஆராய்ச்சி இயல்தகவுக் கற்கைகள், பயிற்சி அத்துடன் வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றை ஆட்கள் மேற்கொள்வதற்கு இயலச் செய்வதற்காக இணையுரிமைகள், புலமைப் பரிசில்கள், பரிசுகள், கல்வி மானியங்கள், மாணவருரிமைகள் என்பவற்றையும் அத்துடன் அவற்றையொத்த அளிப்பு களையும் வழங்குதல் ;

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த அல்லது அவற்றை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்களான ஆட்களுக்கு அல்லது ஆட்கள் குழுவுக்கு நன்கொடைகள், கொடைகள், உதவிப் பணங்கள் என்பவற்றைக் கொடுத்தல் ; அத்துடன்

(ஓ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்து வதற்கு அவசியமானவையும் விரும்பத்தக்கனவுமான அனைத்து ஏனைய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல்.

5. கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், அப்போதைக்கு வலுவிலிருக்கின்றனவான கூட்டுத்தாபனங்களின் விதிகளுக்கு அமைவாக அத்தகைய விதிகளுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்படும் அத்தகைய எண்ணிக்கையினரான பதவிதாங்குநர்களைக் கொண்ட முகாமைக்குழுவொன்றினால் நிர்வகிக்கப்படுதல் வேண்டும். முகாமைக்குழு.

6. (1) கூட்டுத்தாபனமானது உறுப்பினர்களின் ஆண்டு, சிறப்பு அல்லது பொதுக்கூட்டமெதிலும், சமுகமளித்து வாக்களித்த உறுப்பினர்களுள் மூன்றிலிரண்டு பங்குக்குக் குறையாத உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குக் கொண்டும், பின்வரும் கருமங்களுள் எதற்காகவும், இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இச்சட்டத்தின் இசைந்தனவானவையாகவிராத கூட்டுத்தாபனம் அத்தகைய விதிகளை காலத்துக்குக்காலம் ஆக்குவது, சட்டமுறையானதாதல் வேண்டும் :— விதிகளை ஆக்குவதற்கான தத்துவம்.

(அ) உறுப்பினர்களைச் சேர்த்தல், இடைநிறுத்தல், மீளப் பெறுதல் அல்லது அகற்றுதல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் வெவ்வேறு வகுப்பினரான உறுப்பினர்கள், அவர்களின் உரிமைகள், சிறப்புரிமைகள் அத்துடன் தகைமைகள் ;

(இ) முகாமைக்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல், அகற்றுதல், அவர்களின் தத்துவங்கள், ஒழுக்கம் அத்துடன் கடமைகள், முகாமைக்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் ;

(ஈ) உறுப்பினர்களிலான உதவுதொகைகள் அத்துடன் ஒப்பப்பணங்கள் என்பவற்றைத் தீர்மானித்தலும் அவற்றைச் சேகரித்தலும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் நிதியங்களைச் செலவிடுதல் அத்துடன் வங்கிக் கணக்குகளைப் பேணி, கொண்டுநடாத்துதல் ;

(உ) கூட்டுத்தாபனத்தினதும் முகாமைக்குழுவினதும் கூட்டங்களைக் கூட்டுவதில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைகள் அத்துடன் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் என்பன ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் நிதிசார் அலுவல்களையும், அதன் கணக்குகளையும் கணக்காய்வு செய்தல் ;

(எ) பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வது, அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுதல்.

(2) இப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதி எதுவும் அல்லது இதன்பின்னர் நிறைவேற்றப்படக்கூடிய ஏதேனும் விதி, கூட்டுத்தாபனத்தின் ஒரு சிறப்பான அல்லது பொதுக்கூட்டம் எதிலும் சமூகமாயிருந்து வாக்களித்த உறுப்பினர்களின் வாக்குகளில் மூன்றிலிரண்டு பங்கு வாக்குகளினால் தவிர மாற்றப்படுதலோ, சேர்க்கப்படுதலோ, திருத்தப்படுதலோ அல்லது இல்லாதொழிக்கப்படுதலோ ஆகாது.

(3) இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலிருக்கும் சங்கத்தின் விதிகள் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அவை முரணாகவிராத அளவுக்கு இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் அப்போதைக்கு வலுவிலிருக்கும் விதிகளுக்கு அமைந்தவர்களாதல் வேண்டும்.

மீளளிப்பு செய்தல்.

7. கூட்டுத்தாபனம், அதன் உறுப்பினரால், அலுவலரால், முகவரால் அல்லது சேவையாளரால் கூட்டுத்தாபனத்தின் சார்பில் நன்னோக்கத்துடனும் அதன் நன்மைக்காகவும் கொடுப்பனவுகள் செய்யப்பட்டன என்ற அளவுக்கு அவற்றை கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினருக்கு, அலுவலருக்கு, முகவருக்கு அல்லது சேவையாளருக்கு மீளளிப்புச் செய்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

8. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, முகாமைக்குழுச் செயலாளரின் கட்டுக்கோப்பில் இருத்தல் வேண்டுமென்பதுடன், முகாமைக்குழுவின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனமெதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தாங்கள் சமுகமளித்தமைக்கு அடையாளமாக, அச்சாதனத்தில் தங்கள் பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியொருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

9. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும் அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது. குடியரசினதும் மற்றேவரினதும் உரிமைகளைப் பேணல்.

10. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.